**பின்வரும்** ***பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பூரணமான வாக்கியங்களின் விடை*** **எழுதுக.**

**පහත ගීතය කියවා අසා ඇති ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න**

தமிழைக் *கற்றுத் தந்திடுவாய்*
தத்துப் பித் *தெனப்* பேசிடினும்,
அமுதம் அமுதம் என்றிடுவாய்
அனைத்து முத்தம் தந்திடுவாய்

எனக்கு சிறு நோய் *வந்தாலும்*
ஏனோ மிக்க வருந்துகிறாய்
உணவும் இன்றி, உறங்காது,
உயிர் மேல் என்னை காக்கின்றாய்

உன்னைப் போலவே வளர்த்திடுவோம்,
உலகில் *உண்டோ, வேறொருவர்?*
என்னைக் காக்கும் அம்மாவே
எனக்குத் தெய்வம் நீ தானே

1. *அம்மா என்ன கற்றுத் தருவார்?*

2. அம்மா அமுதன் என்று கூறுவது எதை?

3. எமக்கு சிறு நோய் வந்தால் அம்மா என்ன செய்வார்?

4. அம்மா எம்மை எப்படிக் காக்கின்றார்?

5. எமது தெய்வம் யார்?

6. பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துச்சொல் எழுதுக?

    1) உலகம் -

    2) பழம் -

    3) சாப்பாடு -